Thaarakam.com

பொ ன நூலகம் யாழ்ப்பாணம்
நூலகம்.

# தமிழீழ தேசவழமைச் சட்டம்

## 1993ம் ஆண்டின் 03ம் இலக்கச்சட்டம்

தமிழீழ நீதிநிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

Thaarakam.com

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்,

பொதுசன நூலகம்
மாநகரசபை
21-12-1993
யாழ்ப்பாணம்

# தமிழீழ தேசவழமைச் சட்டம்

## 1993ம் ஆண்டின் 03ம் இலக்கச்சட்டம்

தமிழீழ நீதிநிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

தமிழீழ தேசவழமைச் சட்டம்

1993

விலை ரூபா 35/-

Thaarakam.com

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



வடதமிழீழத்தில் காணப்பட்ட வழமைகளை அடிப்படையாகக்கொண்டு, ஒல்லாந்தரினால் கோவை செய்யப்பட்ட தேச வழமை விதிகளை அடியொற்றியும், இன்றைய சமூக மாற்றத்திற்கும், தேவைகளுக்கும் இணங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டதான ஒரு சட்டம்.

இச்சட்டம் தமிழீழத்தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஒப்புதலின் அடிப்படையில் சட்டமாக்கப்படுகிறது.

## அத்தியாயம் - 01

01. இச்சட்டம் 'தமிழீழ தேசவழமைச் சட்டம்' எனப்படும். இச்சட்டம் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 - ந்திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

02. இச்சட்டம் 'தமிழீழ தேசவழமைச் சட்டம்' என அழைக்கப்படும். இத்தேசவழமைச் சட்டத்தில் அடங்கியவை வடதமிழீழத்தில் வதியும் சகல தமிழர்கட்கும் அவர்கள் ஆதிக்குடியினராகவிருந்தாலும்அல்லது பின்னர்வந்து குடியேறியவர்களாயினும் ஏற்புடையது. ஆனால் அதேவேளை வடதமிழீழத்தில் உள்ள சகல ஆதனங்களையும் இச்சட்டம் கட்டுப்படுத்தும்.

## அத்தியாயம் - 02

# பொதுவிளக்கங்கள்

03. கட்சிக்காரருக்கு இடையே உள்ள தொடர்புடைய பிரச்சனைகள் யாவும் தமிழீழ நீதிமன்றங்களில் இந்தச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும்.

04. 'வதிவாளர்' என்பது வடதமிழீழத்தில் தொன்றுதொட்டு வசித்து வருபவர்களையும், பின்னர் வந்து குடியேறி தொடர்ந்தும் வடதமிழீழத்தில் வதியும் எண்ணம் கொண்ட தமிழரையும் உள்ளடக்கும்.

05. 'ஆள்சார்' என்பது இக்கோவையில் வடதமிழீழத்தில் நிரந்தரமாக வதியும் மக்களைக் குறிக்கும்.

06. 'நிலம்சார்' என்பது வடதமிழீழத்தில் உள்ள சகல காணிகளுக்கும் ஏற்புடைய சட்டம் என்பதைக் குறிக்கும்.

07. 'சேவகம்' என்பது ஒரு ஆதனத்தின் சொந்தக்காரன் என்ற முறையில் இன்னொருவரது ஆதனத்தின் மீது உள்ள சில உபயோகம், உரிமைகள், நயமாகும்.

08. இக்கோவையில் ஒருமையில் குறிப்பிடப்படும் எவையும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பன்மையிலும், பன்மையில் குறிப் பிடப்படும் எவையும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒருமையிலும் பொருள் கொள்ளப்படும்.

## அத்தியாயம் - 03

# தேசவழமையில் காணப்படும் சொத்தின் தன்மை

09. 'முதுசம்' என்பது ஒருவனுக்கோ, ஒருத்திக்கோ அவர்களது பெற்றோர்களிடம் இருந்து அல்லது அவரது பெற்றோரின் முன்வழியில் உள்ள உரித்தாளரிடம் இருந்து வந்து சேரும் சொத்தாகும். ஆண், பெண் இருபாலாரும் மணம் முடிக்க முன்பு தாம் உழைத்த தனிப்பட்ட சொத்து என்பவற்றை யும் இது உள்ளடக்கும்.

10. 'உரிமைச் சொத்து' ஒரு ஆணிற்கும், பெண்ணிற்கும் தந்தை யல்லாத அல்லது அவர் முன் வழியுரிமையாளர் அல்லாத சொந்தக்காரரிடம் இருந்து இறப்பின்போது வந்து சேரும் சொத்து, உரிமைச் சொத்து எனப்படும்.

11. 'சீதனம்' என்பது திருமணத்தின்போது மனைவி கொண்டு வரும் சொத்தாகும். சீதனம் திருமணத்திற்கு முன்னும், திருமணத்தின் பின்னும், திருமணத்தின் போதும் சம்பந்தப் பட்ட பெண்ணிற்குக் கொடுக்கலாம்.

12. 'தேடிய தேட்டம்' என்பது திருமணம் வலுவில் இருக்கும் காலத்தில் பெறுமதிமிக்க கிரயத்திற்காக கணவன், மனைவி யினரால் தேடப்பட்ட சொத்தின் பகுதியாக அமையக் கூடியது. திருமணம் வலுவில் இருக்கும்போது கணவன் மனைவியின் தனிப்பட்ட சொத்திலிருந்து பெறப்பட்ட லாபங்களும் 'தேடிய தேட்டமாகும்.' திருமணம் வலுவில் இருக்கும் காலத்தில் கணவனின் முதுசப்பணத்தில் இருந்தோ

Thaarakam.com

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



அல்லது மனைவியின் முதுசம் அல்லது சீதனப்பணத்தில் இருந்தோ வாங்கப்படும் ஆதனங்கள் தேடிய தேட்ட ஆதனங்கள் ஆகமாட்டா.

## அத்தியாயம் - 04

# வழியுரிமை

13. திருமணம் வலுவிலுள்ள வேளை தம்பதியினருள் ஒருவர் இறக்கும் பொழுது உயிருடன் மறுமணம் செய்யாமல் இருக்கும் மற்றைய மணத்துணைவர் இறந்தவரது தனிப்பட்ட சொத்தில் 1/4 நாலிலொரு பங்கிற்கு உரித்துடையவராவார். எனினும் இவ்வாறு உரித்தடைந்தவர் இறக்கும்போது இச்சொத்து வந்தவழியே திரும்பிச் செல்லும்.

14. தம்பதிகளில் ஒருவர் இறப்பின் இறந்தவருடைய தேடிய தேட்ட அரைப்பங்கு, முன்னரே இறுதி விருப்பாவணம் அல்லது வேறு விதமாகவோ பராதீனப்படுத்தாவிடில் உயிருடன் இருக்கும் பகுதியினருக்கு இறந்தவரின் அரைப் பங்கில் அரைவாசிப்பங்கும், மிகுதிப்பங்கு இறந்தவரின் வழியுரிமையாளருக்கும் சென்றடையும். (தேடிய தேட்ட சொத்து வாங்கிய உடனேயே தம்பதியினர் இருவருக்கும் சம உரித்துடையதாகிறது.)

15. வழியுரிமை முறையே கீழ்ப்பரம்பரை, மேற்பரம்பரை, உடன்பரம்பரை என்ற ஒழுங்கு முறையில் அமையும்.

அ. தாய், தந்தையரின் சொத்துகளுக்கு வேறு எவரிலும் பார்க்க பிள்ளைகள், பேரப்பிள்ளை தூரத்து பின் உரித்தாளர்களே முன்னுரிமை பெறுகின்றனர். பிள்ளைகள் சரிபங்காகவும், பிள்ளைகள் எவரேனும் இறப்பின் அவர்களின் பிள்ளைகள் தங்களுக்குள் சம பங்காகவும் பெறுவர்.

ஆ. தாய், தந்தையரின் இறப்பின் பின் ஆண்பிள்ளைகளோ, சீதனம் பெறாத பெண்பிள்ளைகளோ இல்லாத பட்சத்தில் மட்டுமே சீதனம் பெற்ற திருமணமான ஒரு பெண் பிள்ளை அச்சொத்துகளுக்கு உரித்தாளியாவார் அல்லது சீதனம் பெற்றுக்கொண்ட பெண்

Thaarakam.com



பிள்ளை தனது சீதனத்தினை, பெற்றோரின் இறப்பினால் எஞ்சியுள்ள சொத்துடன் ஒன்றுசேர்த்து மீண்டும் உடன்பிறப்புக்களுடன் சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

இ. சட்டப்படி திருமணமாகாதவர்கட்குப் பிறந்த பிள்ளைகள் தம் தாயின் சொத்திற்கு உரித்தாளராவர். தந்தையின் சொத்திற்கு உரித்தாளர் ஆக மாட்டார்.

ஈ. சட்ட முறையற்ற நபர் ஒருவர் கணவன் அல்லது மனைவியின்றி பின் உரித்தாளரும் இல்லாமல் இறந்தால் அவனது அல்லது அவளது சொத்துக்கள் தாயைச் சென்றடையும். தாயும் இல்லாவிட்டால் தாயின் உரித்தாளரைச் சென்றடையும்.

உ. எவராவது இறுதி விருப்பாவணம் எழுதாமல், வழியுரித்தாளர் ஒருவர் இல்லாமல் இறக்கும் பட்சத்தில் அவரது சொத்துக்கள் தமிழீழத்திற்கான பொதுச் சொத்தாகும்.

## அத்தியாயம் - 05

# திருமணம்

16. வலுவான திருமணம் ஒன்றிற்கு காணப்படவேண்டிய அம்சங்கள்:

அ. திருமணம் புரிபவர்கள் திருமண ஒப்பந்தம் செய்யத் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

1. ஆண் 21 வயதையும் பெண் 18 வயதையும் அடைந்திருக்க வேண்டும். ஆனால் இருபகுதியினரின் பெற்றோர்கள் சம்மதம் வழங்கும் பட்சத்தில் 16வயதை எட்டிய பெண்ணுக்கும் 18வயதை அடைந்த ஆணுக்கும் திருமணம் நிறைவேற்றப்படலாம்.

2. ஆண் சகோதரர்களுடைய பிள்ளைகள் அல்லது பெண் சகோதரர்களுடைய பிள்ளைகள் தங்களுக்குள் விவாகம் செய்யத் தகுதியற்றவர்கள்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
தண்டிக்குளி கிளை நூலகம்.

Thaarakam.com



3. ஒரு திருமணம் நிலைத்திருக்கும் வேளையில் வேறு ஒரு திருமணம் செய்ய முடியாது.

ஆ. வலுவான திருமணத்திற்கு இரு தரப்பினருடைய மனப் பூர்வமான சம்மதம் அவசியம். 18 வயதை எட்டிய ஆணும் 16 வயதை எட்டிய பெண்ணும் திருமணம் செய்வதற்கு அவர்களது பெற்றோர்களின் சம்மதங்கள் தேவை (பெற்றோர்கள் எனும்போது தாய், தந்தை இருவரையும் குறிக்கும்). அவர்களில் ஒருவர் இறந் திருப்பின் அல்லது சட்டப்படியான விவாகரத்து பெற்று இருப்பின் எஞ்சியிருக்கும் துணை சம்மதம் தெரிவிக்கலாம். இருவரும்இல்லாத பட்சத்தில் மாவட்ட நீதிமன்றின் அனுமதியைப் பெற்ற பின்பே திருமணம் செய்யலாம்.

இ. சில முறைப்படியான சடங்குகள் நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும். சமய முறைப்படி செய்யப்பட்ட திருமணங்கள் வலுவுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளன. சமய முறைப்படியான திருமணங்களில் சில சடங்குகள் (மிக) அத்தியாவசியமானவை. இவை சாட்சியங்கள் மூலம் தீர்மானிக்கப்படும்.

17. ஒரு ஆணும் பெண்ணும் ஊரறியக் கணவன் மனைவியாக வாழ்ந்தால் அவர்கள் திருமணம் செய்தவர்களாகக் கருதப் படுவார்கள்.

18. திருமணத்திற்கு முன்னர் அல்லது பின்னர் தாரத்திற்குச் சொந்தமாகவிருந்த அல்லது சொந்தமாகும் சொத்துக்கள் தொடர்ந்தும் திருமணத்தின் பின்னரும் அத்தாரத்தின் சொந்தமாகவே இருக்கும். மறுதாரத்தின் பிரத்தியேக கடன்களுக்காக இச்சொத்தை அறவிடமுடியாது.

19. திருமணமான பெண்கள் சகல விதத்திலும் சுதந்திரமாக விளங்குவார்கள். மனைவி தனது பிரத்தியேக தனிச் சொத் தையும், தேடிய தேட்டத்தின் அரைப்பங்கையும் தன் இஷ்டப்படி கணவனின் சம்மதம் இன்றி கையாள்வதற்கு உரித்துடையவர்.

Thaarakam.com



20. கணவனும், மனைவியும் திருமணம் வலுவில் இருக்கும் காலத்தில் தாம் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுக்கும், செய்யவேண்டிய கடமைகளுக்கும், கிடைக்கப்போகும் சகல நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் பொதுவான முறையில் இருவரும் சமமான வகையில் உரித்தும் கடமைப்பாடும் உடையவராவர்.

21. மனைவி தனது கணவனை கட்சிக்காரராய்ச் சேர்க்காமல் தனது சொந்த நிலையில் வழக்குகளை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யும் உரிமை உடையவர்; எதிர்த்து வாதாடவும் முடியும்.

22. மனைவியோ, கணவனோ இறப்பின் தேடிய தேட்டச் சொத்தில் எஞ்சியவருக்கு உரிமையான (3/4) நாலில் மூன்று பங்கு சொத்திற்கு மேலதிகமாக அவர் பராதீனப்படுத்த முடியாது.

23. தம்பதியினர் பிரிந்திருக்கும் நிலை ஏற்படும் பட்சத்தில் கணவன் அல்லது மனைவி தேடிய தேட்டச் சொத்தின் அரைப்பங்கை விட மேலதிகமாக பராதீனப்படுத்த முடியாது.

24. திருமணம் வலுவுள்ள காலத்தில் கணவன் அல்லது மனைவி தேடிய தேட்ட சொத்தின் தங்களது அரைப்பங்கை கணவனின் அல்லது மனைவியின் சம்மதம் இன்றி தன்னிச்சையாக ஈடுவைக்கவோ அல்லது வேறு விதத்தில் பராதீனப் படுத்தவோ உரிமையுடையவர்களாகிறார்கள்.

## அத்தியாயம் - 06

# சேவக உரித்து

25. ஒரு ஆதனத்தில் அல்லது கட்டிடத்தில் இன்னொரு ஆதனத்திற்கோ அல்லது அவைகளுக்குச் சொந்தமில்லாத வேறு ஒருவருக்கோ இருக்கும் உபயோக உரித்து அல்லது நயம் சேவக உரித்து எனப்படும்.

26. ஒருவன் தன்னுடைய காணியில் எல்லை உள்ளுக்காக ஒரு பலன் தரும் மரத்தை தண்ணீர் இறைத்து தனது சொந்த

Thaarakam.com

பொதுசன நூல்கம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



Thaarakam.com

முயற்சியால் உண்டாக்கி வைத்தால் அந்த மரம் கோணலாக வளர்ந்து மரம் முழுவதும் அல்லது சில கொப்புகள் மாத்திரம் அயல் காணிக்குள் சாய்ந்து நின்றால் அதன் பயன் முழுவதும் மரம் உடையவனுக்குச் சேரவேண்டியதுமல்லாமல் மேலே கொப்புகள் தூங்குகின்ற அயற்காணிக்காரருக்கு யாதொரு உரித்துமில்லை. அயற்காணிக்காரன் பழங்கள் பிடுங்கவும் முடியாது. ஆனால் அவ்வித வளர்ச்சி உண்மையில் அயற்காணிக்காரருக்கு பாதகம் விளைவிக்குமானால் நீதிமன்ற அனுமதியுடன் அவற்றை அகற்றலாம்.

27. மனிதனுடைய முயற்சியில்லாமல் தானாகவே உண்டாகும் மரங்களான புளி, இலுப்பை, வேம்பு முதலியவை எந்தெந்த நிலத்தில் கொப்புகள் சாய்ந்து நிழல் உண்டாக்குகின்றதோ, அத்தகைய கொப்புகள் குறித்த நிலச் சொந்தக்காரனுக்கே பிரயோசனமுடையதாகும். தனது நிலத்திலே சரிந்த கொப்புகள் இடையூறு கொடுக்கும் பட்சத்தில் மரச் சொந்தக்காரரின் அனுமதியுடன் அல்லது முன்னறிவித்தல் கொடுத்து தறிக்கவும், தறித்த கொப்புகளை விற்கவும் உரிமையுண்டு. ஆனால் வேப்பமரம் போன்ற பிரயோசனம் தரும் மரங்களை உரிய அனுமதியின்றி தறிப்பது சட்டவிரோதமானசெயலாகும்.

28. காணி ஒருவருக்கு உடையதாக இருந்தாலும், அதில் நிற்கும் முழுப்பனை வேறு ஒருவருடையதாக இருந்தாலும் வடலிகள், நிலக்காரனுக்கேயன்றி முழுப்பனைக்காரனுக்குச் சொந்தமாகவிருக்காது.

29. தேசவழமைப்படி வேலி அடைப்பதன் பொருட்டு அயலவர் காணிக்குள் பிரவேசித்து கிடுகுகளை கும்பலாக குவித்து தனது வேலியை அடைக்கலாம். இதன்பொருட்டு அயலவரின் காணியுள் பாதிப்புக்கள் ஏற்படா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்.

30. கிணற்றுப்பங்குடைய ஒருவருக்கு கிணறு, துலா, ஆடுகால், தூர்வை, வழிவாய்க்கால் மற்றும் அவை சார்ந்த யாவற்றிலும் உரிமையுண்டு. இவ்விடயங்களில் நீதிமன்றங்கள் ஒப்புரவு சமூகநீதி அடிப்படையில் வழக்கு நிகழ்வுகளுக்கு ஏற்ப தீர்ப்புக்களை வழங்கலாம்.

31. ஒரு சேவகத்தை சேவக உரித்துடையவர் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ கைவிடலாம். நீண்டகாலமாக ஒருவர் நீரெடுக்கும் உரிமையைப் பாவிக்காமல் விட்டால் அவ்வுரித்து அழிந்து, ஒழிந்து போய்விடும்.

32. சேவகத்தை அனுபவிக்கும் ஒருவர் சொந்தக்காரனுக்கு அசௌகரியங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

## அத்தியாயம் - 07

# முன் வாங்கும் உரித்து

33. ஒருவர் தனது அசைவற்ற ஆதனத்தின் சொரியல் பங்கை பிறிதொருவருக்கு விற்குமிடத்து சொரியல் பங்காளர் அல்லது விற்பவரின் வழியுரித்தாளர் அவ்வாதனத்தை சந்தைக்கிரயம் செலுத்தி அறுதி வாங்கிக்கொள்ளும் உரித்தே முன்வாங்கும் உரித்து எனப்படும்.

34. சொரியல் பங்காளர் அல்லது விற்பவரின் வழியுரிமைக்காரர் முன்வாங்கும் உரித்தைக் கொண்டுள்ளார்கள்.

35. காணிச்சொந்தக்காரர் முன்வாங்கும் உரித்தாளர் இருப்பின் தமது உத்தேச விற்பனைபற்றி முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்யத் தவறின் முன்வாங்கும் உரித்துடையவர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்து காணியை தாமே விலைக்குப் பெறும் உரித்துடையவராவர்.

36. சொரியல் பங்காளர் எனப்படுவோர் ஓர் காணியில் பிரிக்கப்படாத பங்குகளுக்கு உரித்துடையவர்கள் ஆவர்.

37. ஒரு காணியில் சேவக உரித்து மட்டும் உடைய ஒருவர் அக்காணியில் சொரியல் பங்காளியாய், முன்வாங்கும் உரித்துடையவர் ஆக மாட்டார்.

38. சொரியல் பங்கை விற்க முனையும் ஒருவர் பிரசித்த நொத்தாரிசு ஒருவர் முன்பாக, முன் அறிவித்தலில் மூன்று (03) பிரதிகளில் கையொப்பமிடவேண்டும். பிரசித்த நொத்தாரிசு அதனை அத்தாட்சிப்படுத்த வேண்டும். ஆனால் காணிப் பதிவகத்தில் பதியவேண்டுமென்பது கட்டாயமல்ல. அறிவித்

Thaarakam.com

தலில் ஆதனத்தை வாங்க உத்தேசித்துள்ளவர் கொடுக்க முன்வந்துள்ள கிரயத் தொகையை குறிப்பிட வேண்டும்.

39. காணியை விற்க விரும்புவோர் இவ்வறிவித்தலில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதியை காணி அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றிற்கு உடனடியாக அனுப்ப வேண்டும். இது அலுவலகத்தில் அத்தகைய அறிவித்தல்களைப் பதிவு செய்வதற்காக அவர்கள் அலுவலகத்தில் பேணப்பட வேண்டிய ஓர் புதிய ஏட்டில் அத்தாட்சிப்படுத்திய அறிவித்தலைப் பதிவு செய்து, அதனை அலுவலகத்தில் உள்ள அறிவித்தல் பலகையில் உடனடியாக பார்வைக்காக விளம்பரப்படுத்த வேண்டும். இத்தகைய அறிவித்தல் தமது அறிவித்தல் பலகையில் முறைப்படி விளம்பரப்படுத்தப்பட்டதாக அவ்வலுவலரால் கையொப்பமிட்டுக் கொடுக்கப்படும். ஒரு 'சான்றிதழ்' அத்தகைய அறிவித்தல்கள் கொடுத்தற்கு முடிவான சான்றாகும்.

40. இவ்வறிவித்தல் கொடுத்த இரண்டு (02) மாதங்களுக்குள் உரித்துள்ள எவரும் அதில் கொடுக்கப்பட்டுள்ள பணத்தைக் கொடுத்து காணியை விற்பனையாளரிடமிருந்து வாங்கலாம். அல்லது அவருடன் வாங்கப் பொருந்திக்கொள்ளலாம். இரு மாத கால எல்லைக்குள் முன்வாங்கும் உரித்து இல்லாத எவருக்கும் இக்காணி மாற்றப்பட்டால் அத்தகைய மாற்று உறுதி வெற்றும் வெறிதானதாகவும் சட்டத்தில் எத்தகைய பலமும் அற்றதாய் ஆகும்.

41. முன்வாங்கும் உரித்துடையவர் அறிவித்தலில் குறிப்பிட்ட கிரயத் தொகையைக் கொடுத்தும், விற்பனை செய்ய அறிவித்தல் கொடுத்தவர் முன்னவருக்கு காணியை விற்காவிடில் அத்தகைய முன்னவர் கிரயத் தொகையை நீதி மன்றத்தில் வைப்பிலிட்டு மனு சத்தியக்கடதாசி மூலம் பின்னவரை முன்னவருக்கு காணியை விற்கும்படி கட்டளையைக் கோரலாம். இந்நடவடிக்கையை அவர் குறித்த இரண்டு (2) மாத கால எல்லைக்குள் மேற்கொள்ள வேண்டும்.

42. இத்தகைய மனுவில் விற்பனை பற்றிய கிரயம் கற்பனையாகப் போடப்பட்டுள்ளது என்ற குற்றம் சம்பந்தப்படுமிடத்து நியாயமான அல்லது சந்தை விலை இது எனக்

குறித்து சத்தியக்கடதாசி மூலம் நிரூபிக்கப்படும் தொகையை நீதிமன்றில் கட்டினால் நீதிமன்றில் பணத்தை வைப்பிலிட வேண்டுமென்ற நிபந்தனையை நிறைவேற்றப் போதுமான தாகக் கருதப்படும்.

43. அறிவித்தலில் காணப்படும் தொகையிலும் பார்க்க குறைந்த தொகை கட்டப்படுமிடத்து சுருக்க விசாரணை மூலமாக ஒரு விசாரணையை நீதிமன்றம் மேற்கொண்டு விலையை நிர்ணயிக்கும். விற்பனையாளர் உறுதியை முடித்துக் கொடுக்கத் தவறுமிடத்து நீதிமன்றம் ஒரு பிரசித்த நொத் தாரிசு மூலம் அதை நிறைவேற்றும்.

44. சுருக்க முறையான மேலே கூறிய நடவடிக்கைகளை முன் வாங்கும் உரித்தாளர் எடுக்காவிடின் அவர் தனது உரித்தை நிலைநாட்ட வேண்டிய ஒழுங்கு முறை வழக்கை தாக்கல் செய்ய வேண்டும். கீழ்க்கண்டவற்றில் எதன் பேரிலும் வழக் குத் தாக்கல் செய்யலாம்.

1. முன்னறிவித்தல் கொடுக்கவில்லை அல்லது கொடுக்கப் பட்ட முன்னறிவித்தல் ஒழுங்கற்று அல்லது குறை பாடுடையது.

2. முன்னறிவித்தலில் கொடுக்கப்பட்ட தொகை கற்பனை யானது அல்லது நன்னம்பிக்கையில் தீர்மானிக்கப்பட வில்லை.

3. முன்னறிவித்தலின்போதும் அதனைத் தொடர்ந்து வந்த இரண்டு மாதங்களுக்குள்ளும் முன்வாங்கும் உரித்தின் படி காணியை வாங்க முன்வருபவர் மாவட்டத்தில் இருக்கவில்லை என்றும், ஆனால் அக்கால எல்லையின் பின்பு நியாயமான காலத்திற்குள்ளும் விற்பனை செய் யப்பட்டிருந்த வேளையில் அறிவித்தலில் காணப்படும் பணத்தைக் கொடுத்தும் விற்பனையாளர் பணத்தை ஏற்கவில்லை என்பவை.

45. விற்பனை உறுதி காணிப்பதிவகத்தில், சரியான பக்கத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு ஒரு ஆண்டு கழிந்ததின் பின் முன்வாங்கும் உரித்து வழக்குத்தாக்கல் செய்யமுடியும்.

46. சொரியல் பங்கை வாங்குபவர் அத்தகைய சொரியல் பங்கை

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



முன்வாங்குமிடத்து, அந்த சொரியல் பங்கை வாங்க முன் உரித்து உடைய வேறொருவர் முன் உரித்துக்கோரி வழக்குத்தாக்கல் செய்ய இயலாது.

47. முன்வாங்கும் உரிமை சம்பந்தமாக ஒன்றுக்கு மேற்பட்ட முன்வாங்கும் உரிமை கோருபவர்களுக்கிடையே போட்டி ஏற்படின் எவர் முதலில் வழக்குத்தாக்கல் செய்கின்றாரோ அவரே முன்வாங்கும் உரித்தைப் பெறுவர்.

48. முன்வாங்கும் உரித்துக்கோரி வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட பின் எந்நேரத்திலும் நீதிமன்றம் தனது சொந்தக் கணிப்பின் பெயரில், காணி விற்பவர் அதற்கு வாங்குபவர் கொடுக்க முன்வந்த தொகை என்ற குறிப்பிட்ட தொகையை நீதிமன்றில் கட்டவேண்டும் எனக் கட்டளையிடலாம். அவ்விதம் நீதிமன்றம் கட்டளையிடப்பட்ட தவணைக்குள் அல்லது மொத்தமாக மூன்று (03) மாதத்திற்கு மேற்படாமல் நீதிமன்றம் நீடித்துக்கொடுக்கக்கூடிய தவணைக்குள் அப்பணத்தை வழக்குத்தாக்கல் செய்பவர் நீதிமன்றில் கட்டவேண்டும். அப்படி அவர் செய்யாதவிடத்து அவரது வழக்கு, விளங்கி முடிப்பதற்காக இருக்கும் வழக்குப் பதிவேட்டில் இருந்து நீதிமன்றினால் நீக்கப்படும்.

49. முன்வாங்கும் உரித்துக்கோரி வழக்குத்தாக்கல் செய்பவர் விற்பனை பற்றி விடுக்கப்படும் முன்னறிவித்தலில் காணப்படும் தொகைக்கு அல்லது விற்பனை செய்யப்பட்டிருப்பின் விற்பனை உறுதியில் காணப்படும் தொகைக்கு குறைந்த தொகையைக் கொடுக்க முடியாது. ஆனால் அவ்விதம் கூறப்பட்ட கிரயம் கற்பனையானது என அவர் நிரூபித்தால் காணிக்காகக் கொடுக்கப்பட்ட உண்மையான கிரயத்தையும், அதன் சந்தை விலையையும் நீதிமன்றம் ஆராய்ந்ததன் பேரில் இரண்டு விலையிலும் எது கூடவோ அதனைக் கட்டி ஒருவர் தனது முன்வாங்கும் உரித்தை நிலை நாட்டலாம்.

50. வழக்கில் நீதிமன்றம் நிர்ணயிக்கும் 'விற்பனைப் பணம்' எனக் குறிக்கும் தொகையை நீதிமன்றம் நிர்ணயிக்கும் திகதியில் செலுத்த வேண்டும். தவறின் அவரது வழக்கு நிராகரிக்கப்படும். வழக்காளி கட்டிய பணத்தை ஏற்று காணிச் சொந்தக்காரர் வழக்காளி பெயருக்கு உறுதி முடித்துக் கொடுக்கத் தவறுமிடத்து நீதிமன்றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

அத்தியாயம் - 08

# தேடிய தேட்டம்

51. கணவனோ, மனைவியோ திருமணம் வலுவுள்ள காலத்தில் ஆதனமொன்றை வாங்கியிருந்தால் இதன் 1/2 பங்கிற்கு ஆதனத்தை வாங்கிய கணவன் அல்லது மனைவியும் எஞ்சிய ஆதனத்தை வாங்காத மனைவி அல்லது கணவனும் ஆதனம் வாங்கப்பட்ட நேரத்திலேயே உரித்தாளர் ஆகின்றார். பின்பு இருவரில் ஒருவர் இறக்கின் இறந்தவரின் 1/2 பங்கில் 1/2 வாசி உயிர் வாழும் கணவன் அல்லது மனைவிக்குச் சென்றடையும்.

52. திருமணம் வலுவுள்ள காலம் என்பது கணவன் மனைவி யிடையே சட்டப்படியான திருமணம் நடைமுறையில் இருக் கும் காலம் ஆகும். சமய முறைப்படி நடைபெற்ற திருமண மும் இதில் அடங்கும்.

53. ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றினால் விவாகரத்து வழக்கில் விவாகரத்து இறுதித் தீர்வை பதியும்வரை திருமண வலு தொடரும்.

54. தம்பதிகள் தமக்குள் இணங்கி பிரிந்து வாழும் காலத்தில் அறுதி வாங்கிய ஆதனம் தேடிய தேட்டமாகும்.

55. ஒரு ஆதனம் தேடிய தேட்டம் அல்ல என்பதை ஒரு நீதி மன்றில் நிருபிக்கும் பொறுப்பு, சுமை அந்நிலையை முன் வைப்பவர் மேல் சாரும்.

56. ஒரு தம்பதியினரில் ஒருவர் தமது பெயரில் மட்டும் அவ்வு றுதியை முடித்திருப்பின் இச்சட்டத்தின் பிரகாரம் உறுதி யில் பெயர் எழுதப்படாத தம்பதியினருக்கும் சம பங்கு சென்றடையும்.

அத்தியாயம் - 09

# நன்கொடை

57. கணவன், மனைவி இருவரும் அல்லது ஒருவர் இன்னொருவருக்கு நன்கொடை கொடுப்பது, ஒப்படை சாதனம் எழுதுவது

Thaarakam.com

Thaarakam.com



போன்றவற்றை செய்து கொள்ளலாம். இப்படி நன்கொடை செய்யும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் யாவும் அவர்கள் கடன்களுக்காக நடுக்கட்ட முடியும். அவ்வேளை யில் இக்கொடை நன்கொடை அல்லது ஒப்படை அல்லது வாங்குதல் நடைபெறவில்லை எனக் கருதப்படும்.

58. இந்தப் பிரகடனத்திற்கும் இன்றைய சமூக நீதிகளுக்கும் இயற்கை நீதிகளுக்கும் முரண்படாத புழைய, புதிய தேச வழமைக்கோவைகளில் உள்ளவற்றை சீர் தூக்கிப் பார்த்து ஏற்ற வகையில் நீதி வழங்குவது நீதியாளர்களின் கடமை யாகும்.

□□

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கன்னாடிக்குளி கிளை நூலகம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம
கண்டிக்குளி கிளை நூலகம்.